30th August 1961]

Sri A. V. P. ASAITHAMBI : ஸார், இந்த கேள்வி பட்டியலே அரசாங்கம் மஞ்சள் பேப்பரில் அச்சிட்டிருக்கிறார்களே, இதை எங்கே வாங்குகிறார்கள்? இதை மாற்றி நல்ல பத்திரிகைத் தாளில் அச்சிட்டால் என்ன?

DEPUTY SPEAKER : The hon. Member may put a separate question.

Medical College for North Arcot

*** 1530 *Q.*—Sri S. M. ANNAMALAI :** கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் பசுமலை குப்பத்தில் உள்ள சர்க்கார் கட்டிடத்தில் வைத்தியக் கல்லூரி ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

Sri S. M. ANNAMALAI : இந்தக் கட்டிடம் எவ்வளவு பணத்திற்கு வாங்கப்பட்டது? எத்தனை காலமாகக் காலியாக இருக்கிறது? இங்கே நல்ல சுகாதார வசதி இருக்கிறது, நல்ல வசதிகளெல்லாம் இருக்கின்றன. வேலூருக்குப் பக்கத்தில் இருக்கிறதே, அங்கு ஏன் ஒரு மெடிக்கல் காலேஜை ஆரம்பிக்கக் கூடாது? இதைப் பற்றி ஏன் பரிசீலனை செய்யக்கூடாது?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தக் கட்டிடத்தை தனியாக வாங்கவில்லை. இந்தக் கட்டிடம் ஒரு அரண்மனை எல்லாம் சேர்ந்து ரொம்பவும் நயமாக வாங்கி விட்டோம். ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கினோம். இந்த இடம் சுமார் 450 ஏக்கர் இருக்கிறது. பெரிய கட்டிடம் இருக்கிறது. ஏதாவது அலுவலகங்களை வைக்கலாம் என்றால் முடியவில்லை. பால் பண்ணை வைக்கலாம் என்று பார்த்தால் முடியாது என்கிறார்கள். பழப் பண்ணை வைக்கலாம் என்றால், அதுவும் முடியாது, நில வளம் இல்லை என்று சொல்லுகிறார்கள். டி. பி. ஆஸ்பத்திரி வைக்கலாம் என்றால் அதுவும் முடியவில்லை. இதற்கே இவ்வளவு கஷ்டங்கள் இருக்கும்போது மெடிக்கல் காலேஜ் வைப்பது சாத்தியமான காரியமே இல்லை.

DEPUTY SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—GOVERNMENT MOTION.

TRANSACTION OF GOVERNMENT BUSINESS ON A NON-OFFICIAL DAY.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

'That Rule 23 of the Madras Legislative Assembly Rules be suspended and the House do resolve to transact Government business on Thursday, 31st August 1961.'

DEPUTY SPEAKER : I hope the House has no objection to it.